***கவனிக்க .*** *– 2015.04.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1913 - 2015 අප්‍රේල් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.04.30

*1913 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி IV(அ) – மாகாண சபைகள்*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 772 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |


***கவனிக்க .*** *– உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் மற்றும் அரசியலமைப்புக்கான இருபத்திமூன்றாவது திருத்தச் சட்டமூலம் ஆகியன 2015, மாச்சு 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.*

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2015, மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மே மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மாத்தறை மாவட்டத்திற்குள் அமைந்துள்ள காணி சுடுகாட்டு நிலம் ஆக நடாத்திச் செல்லுவதற்கு சுடுகாட்டு நிலம் உடன் மயான பூமி அதிகார சட்டத்தின் 34 ஆவது பிரிவின் கீழ் நிறுத்தி வைத்தல்**

தென் மாகாண சபையின் உள்ளூராட்சி தாபன விடயத்துக்கு பொறுப்பான அமைச்சராக எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் செயல்கள் செயற்படுத்தும் போது அல்லது நிறைவேற்றும் போது உகந்த அதிகாரி மாத்தறை மாநகர சபை மற்றும் மாத்தறை சுகாதார வைத்திய அதிகாரியின் அபிப்பிராயம் இதன் கீழ் I ஆவது அட்டவணையில் குறிப்பிட்ட அதிகாரம்பெற்ற அளவையாளர் ஹென்றி அபேசிங்க அவர்களால் 2011.05.20 ஆந் திகதி ஒழுங்கு செய்யப்பட்ட இல. 28/2011 உடைய திட்டத்தின் ஈ/1 என்றவாறு காட்டப்பட்டுள்ள காணித்துண்டு சுடுகாட்டு நிலமாக பயன்படுத்துவதும் நடாத்திச்செல்லுவதும் சுடுகாட்டு நிலம் உடன் மயான பூமி அதிகார சட்டத்தின் 34 ஆவது பந்தியின் கீழ் நிறுத்தி வைக்கப்படும்.

அதன்படி இதன் கீழ் அட்டவணையில் இல. 1 இல் விபரம் குறிப்பிட்ட அந்த காணி சுடுகாட்டு நிலமாக பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்திவைப்பதற்கு அனுமதி அளிக்கின்றேன்.

இந்த காணி சம்பந்தமாக 1940.01.12 ஆந் திகதி இல. 8567 உடைய அரச வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை உடனே இயங்கும்படி இதன் மூலம் நிராகரிக்கப்படும் என மென்மேலும் அறியத்தருகின்றேன்.

குஸ்திஞ்ஞாவடு சான் விஜயலால் த சில்வா,
தென் மாகாண முதல் அமைச்சர்,
சட்டமும் ஒழுங்கும், சுகாதார சுதேசிய வைத்திய உள்ளூராட்சி
போக்குவரத்து மற்றும் சுற்றுலா அமைச்சர்.

பிரதான அமைச்சு அலுவலகம்,
தக்ஷினபாய, லபுதுவ,
2015, மாச்சு 18.

**அட்டவணை - I**

தென் மாகாணம் மாத்தறை மாவட்டத்தில் கடவத் சதர பிரிவில் மாத்தறை மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள மஹபெலவத்தை அல்லது இகினிகஹவத்தை என்னும் காணியின் அதிகார அளவையாளர் ஹென்ரி அபேசிங்க அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இல. 21/2011 மற்றும் 2011.05.20 ஆந் திகதி திட்டத்தின் பேர்ச்சஸ் 30.5 காணி அளவுடைய கீழே குறிப்பிட்ட எல்லைக்குள் அமைந்துள்ள இல. ஈ/1 உடைய பிரித்து வேறாக்கப்பட்ட காணி.

காணியின் எல்லை
வடக்கு : அந்த காணியின் "டி" எழுத்துடைய காணித்துண்டு;
கிழக்கு : ஈ/2 உடைய காணித்துண்டு மற்றும் அபேகுணரத்ன மாவத்தை;
தெற்கு : அந்த காணியின் "எப்" எழுத்துடைய காணித்துண்டு;
மேற்கு : அனகாரிக தர்மபால மாவத்தை.

4-882/1

---

**மாத்தறை மாவட்டத்திற்குள் அமைந்துள்ள காணி சுடுகாட்டு நிலம் உடன் மயான பூமி அதிகார சட்டத்தின் 33 ஆவது பிரிவின் கீழ் சுடுகாட்டு நிலமாக குறிப்பிடப்படும்**

சுடுகாட்டு நிலம் அல்லது மயான பூமி அதிகார சட்டத்தின் 33 ஆவது பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, தென் மாகாண உள்ளூராட்சி தாபன விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஆகிய என்னால் உகந்த அதிகாரி மாத்தறை மாநகர சபை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியின் சிபாரிசு படி இதன் கீழ் II ஆவது அட்டவணையில் குறிப்பிட்ட ஈ/2 உடைய காணி முதலிது என். ஏ. விக்ரமசூரிய அவரின்

சந்ததியினர் (வழித்தோன்றல்) குடும்ப சுடுகாட்டு நிலமாக சுடுகாட்டு நிலம் உடன் மயான பூமி அதிகார சட்டத்தின் 33 ஆவது பிரிவின் கீழ் அனுமதி அளிக்கின்றேன்.

அதன்படி கீழ் II ஆவது அட்டவணையில் குறிப்பிட்ட அக்காணி குடும்ப சுடுகாட்டு நிலமாக நடாத்திச் செல்லுவது என்று மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

குஸ்திஞ்ஞாவடு சான் விஜயலால் த சில்வா,
தென் மாகாண முதல் அமைச்சர்,
சட்டமும் ஒழுங்கும், சுகாதார சுதேசிய வைத்திய உள்ளூராட்சி
போக்குவரத்து மற்றும் சுற்றுலா அமைச்சர்.

பிரதான அமைச்சு அலுவலகம்,
தக்ஷினபாய, லபுதுவ,
2015, மாச்சு 18.

## அட்டவணை - II

தென் மாகாணம் மாத்தறை மாவட்டத்தில் கடவத் சதர பிரிவில் மாத்தறை மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள மஹபெலவத்தை அல்லது இகினிகஹவத்தை என்னும் காணியின் "ஈ" எழுத்துடைய காணித்துண்டில் அதிகாரம் பெற்ற அளவையாளர் ஹென்ரி அபேசிங்க அவர்களால் 2011.05.20 ஆந் திகதி ஒழுங்கு செய்யப்பட்ட இல. 21/2011 உடைய அளவைத் திட்டம் படி கீழே குறிப்பிட்ட எல்லைக்குள் அமைந்துள்ள பேர்ச்சஸ் 0.5 காணி அளவுடைய இல. ஈ/2 உடைய பிரித்து வேறுபடுத்தப்பட்ட காணி.

காணியின் எல்லை
வடக்கு : அந்த காணியின் "டி" எழுத்துடைய காணித்துண்டு;
கிழக்கு : அபேகுணரத்ன மாவத்தை;
தெற்கு : இல. ஈ/1 உடைய காணித்துண்டு;
மேற்கு : இல. ஈ/1 உடைய காணித்துண்டு.

4-882/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.